2020 பிப்ரவரி 19] *[டாக்டர் வி. சரோஜா]*

(மேசையைத் தட்டும் ஒலி) நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள குடிமராமத்து நாயகன், காலம் நமக்குத் தந்த கொடை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், பண்பின் சிகரம் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களையும், இந்த அவையோரையும் வணங்கி, மகிழ்கிறேன்.

6. உரிமை மீறல் பிரச்சினை

'புதிய தலைமுறை' மற்றும் 'நியூஸ் 18' தொலைக்காட்சிகள்மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவை உரிமை மீறல் பிரச்சினை. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள், நேற்று இந்த அவையிலே, அவர் தெரிவித்த ஒரு கருத்து குறித்து 'புதிய தலைமுறை' மற்றும் 'நியூஸ் 18' தொலைக்காட்சிகள் உண்மைக்கு மாறாக செய்தி வெளியிட்டது குறித்து உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை பேரவை விதி 219–ன்கீழ் அவையில் எழுப்ப அனுமதி கோரி அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். அவருக்கு நான் அனுமதி வழங்குகிறேன். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தின் நான்காவது தூணாக பத்திரிகைத் துறையை எங்களுடைய இயக்கமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நினைக்கின்றார்கள். அந்த வகையிலே நேற்று தி.மு.க.-வினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது.* TASMAC *நிறுவனத்தினுடைய வருமானம் அதிகமாகிவிட்டது என்று சொன்னார்கள். அது உங்களுடைய ஆட்சிக் காலத்திலும், விலைவாசி ஏற்றம் ஏற்படுகின்றபோது அதனுடைய வருவாய் அதிகரித்துக் கொண்டிருந்தது. உங்கள் ஆட்சியிலும் அதிகமாக இருந்தது; எங்கள் ஆட்சியிலும் அதிகமாக இருந்தது என்று சொன்னேன். அப்போது இங்கே பேசியவர்கள், குறுக்கீடாக "அதிகமாகக் குடிப்பதனால் வருமானம் அதிகமாகிவிட்டது" என்று சொன்னார்கள். நாங்கள் விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றோம். அதற்காக 3 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி இருக்கின்றோம்; குறுக்கிட்டதற்கு நான் "அளவுக்கு மீறிக் குடிக்கின்றார்கள்; அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?" என்று*

[திரு. பி. தங்கமணி] [2020 பிப்ரவரி 19

சொன்னதை மாற்றி, அந்த இரண்டு செய்தி நிறுவனங்களிலுமே "மக்கள் அதிகமாகக் குடிக்கின்றார்கள்; அதனால் வருமானம் அதிகமாக வருகிறது" என்று செய்திகள் வந்திருக்கின்றன. அதுகுறித்து நான் தங்களிடத்திலே உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கின்றேன். நான் பேசிய அந்த அவைக் குறிப்பையும் உங்களிடத்திலே கொடுத்திருக்கின்றேன். ஆக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதற்கு தகுந்த நீதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோது அவை உரிமை மீறல் இருப்பதாகத் தெரிவதால், பேரவை விதி 226–ன்கீழ் அதுகுறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக அவை உரிமைக் குழுவிற்கு இதனை அனுப்பி வைக்கிறேன். (குறுக்கீடுகள்)

7. 18–2–2020 அன்று அமைச்சர்மீது எழுப்பப்பட்டு, தீர்ப்பளிக்கப்பட்ட உரிமை மீறல் பிரச்சினையை மீண்டும் வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, என்னவென்று சொல்லுங்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த அவையிலே இலங்கைத் தமிழர்களுக்கான இரட்டைக் குடியுரிமை குறித்த ஓர் உரிமை மீறல் பிரச்சினையை மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்மீது நான் கொண்டு வந்தபோது, அவர்கள் இந்த அவையிலே தெரிவித்த பல்வேறு கருத்துகள், மீண்டும் அவர்மீது உரிமை மீறல் கொண்டு வருவதற்கான முகாந்திரம் இருப்பதாக நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள்; மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, நீங்கள் நேற்று ஓர் உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்தீர்கள். அது இந்த அவையிலே இருக்கிற உறுப்பினர்மீது என்கிற காரணத்தினாலே, அவரை நான் விளக்கம் தெரிவிக்கக் கேட்டுக்கொண்டேன். அவரும் விளக்கம் தெரிவித்துவிட்டார். விளக்கம் தெரிவித்ததற்குப் பிறகு, (குறுக்கீடுகள்)